<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி</u>
<u>அசல் வழக்கு எண். 95/2020</u>

2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 04 ம் நாள் சனிக்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. அ.சீனிவாசன், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | கருணாமூர்த்தி | தந்தை/கணவர் பெயர் | : |
| ஜாதி | : | | கிராமம் | : |
| வட்டம் | : | | மதம் | : |
| தொழில் | : | | வயது | : |

நாள் : <u>04.12.2021</u>

<u>வா.சா.1</u>

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை -</u>

நான் இலங்கையில் பிறந்தேன். இரட்டை குடியுரிமை உள்ளது. நான் இந்திய தமிழர். எனக்கு இரட்டை குடியுரிமை உள்ளதை காண்பிக்க ஆதாரம் உள்ளது. அதை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். எந்த வருடம் இரட்டை குடியுரிமை வழங்கப்பட்டது என்றால் இந்திய துாதரகத்தால் ஓவர்சீஸ் சிட்டிசன் ஆப் இந்தியா என்று ஆயுட்கால விசா வழங்கப்பட்டுள்ளது. பிரதிவாதியை 1979 ஆம் ஆண்டிலிருந்து தெரியும். தற்போது 10 முதல் 15 வருடங்களாக இருவருக்கும் தொடர்பு உள்ளது. நான் நடத்தும் நிதி நிறுவனம் 1985 ஆம் முதல் நடத்தி வருகிறேன். பொதுவாக ஒரு நபருக்கு கடன் கொடுக்கும் போது அவரிடமிருந்து காசோலை, கடனுறுதி சீட்டு மற்றும் சொத்து ஆவணம் வாங்குவது வழக்கம் என்றால் சரிதான். நான் நகை அடமானக்கடன் கொடுக்கிறேன் என்றால் சரிதான். கருணா கார்ப்பரேசன் தொழிலில் நகை அடமானக்கடன் இல்லாமல் வேறு கடனும் தெரிந்தவர்களுக்கு மட்டும் கொடுப்பேன். பிரதிவாதி 2017 ஆம்

ஆண்டு ஜுன் மாதம் முதல் தேதியிலிருந்து பணம் வேண்டும் என்று கேட்டார். அவர் இண்டர்கிரேட்டட் ஷேர் புரோக்கர் கம்பெனி மூலமாக ஷேர் வியாபாரம் செய்து வந்தார். அதற்குண்டான ஆவணங்களை போனில் காண்பித்தார். பிரதிவாதி எப்போது திருச்சிக்கு வந்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. அவரை திருச்சியில் எப்போது பார்த்தேன் என்றால் 2013 ல் அவரை நான் திருச்சியில் பார்த்தேன். வைத்தீஸ்வரன் என் அக்கா மகன். ஜெமினி ரியலேட்டர்ஸில் அவரும் நானும் நடத்தி வருகிறோம். வைத்தீஸ்வரனுக்கும் பிரதிவாதிக்கும் பழக்கம் உண்டு. பிரதிவாதி சென்னையில் மர வியாபாரம் செய்து வந்தாரா என்றால் தெரியாது. பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்வதற்கு வேண்டிய விபரங்களை நான்தான் சொன்னேன். சென்னையில் மர வியாபாரம் செய்து கொண்டிருந்த பிரதிவாதியை வைத்தீஸ்வரன்தான் திருச்சி ரியல் எஸ்டேட் செய்வதற்கு வரவழைத்தார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. பிரதிவாதியையும் என்னுடைய கூட்டாண்மை நிறுவனத்தில் பங்குதாரராக சேர்க்கப்பட்டார் என்றால் சரியல்ல. ஜெமினி ரியலேட்டர்ஸ் நிறுவனம் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதற்காகதான் ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டும் ஆவணம் ஜெமினி ரியலேட்டர்ஸ் நிறுவன பதிவு சான்று என்றால் சரிதான். அதோடு கூட்டாண்மை பத்திரமும் உள்ளது என்றால் சரிதான். அதில் பிரதிவாதி 2வது சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார். மேற்படி நிறுவனத்திற்காக ஒரே சொத்துதான் திண்டுக்கல் ரோட்டில் வாங்கப்பட்டது. வேறு சொத்துக்கள் எதுவும் வாங்கப்படவில்லை. திண்டுக்கல் ரோடு சொத்தை தவிர வேறு சொத்திற்கு நாங்கள் கூட்டாண்மை நிறுவனத்தின் மூலம் முதலீடு எதுவும் செய்யவில்லை. வைத்தீஸ்வரன் 2015 ஆம் ஆண்டு நோய் வாய்ப்பட்டார். அவர் திருச்சியிலிருந்து சிகிச்சை பெற்றாரா எனக்குத் தெரியவில்லை. திருச்சி ஏபிசி மருத்துவமனையில் வைத்தியம் செய்தாரா என்றால் எனக்கு தெரியவில்லை. ஆனால் சென்னையில் சிகிச்சை மேற்கொண்டார். 2015 ஆம் ஆண்டு நோய்வாய்பட்டதால் வைத்தீஸ்வரன் குடும்பம் அவரை விட்டுவிட்டு சென்னைக்கு

போய்விட்டார்கள். அவர் மட்டும் திருச்சியில் தங்கி சிகிச்சை மேற்கொண்டார் என்றும், அவரை பார்த்துக் கொண்டது பிரதிவாதிதான் என்றால் தெரியவில்லை. அந்த கால கட்டத்தில் நான் எங்கு இருந்தேன் என்று ஞாபகம் இல்லை. நான் கொடுத்ததாக சொல்லும் பணத்தை பிரதிவாதிக்கு திருப்பி கொடுக்கும் தகுதி உள்ளதா என்பதை தெரிந்து கொண்டுதான் கொடுத்தேனா என்றால் தெரிந்துதான் கொடுத்தேன். அவர் அந்த காலகட்டத்தில் என்ன வியாபாரம் செய்தார் என்று தெரிந்துதான் கொடுத்தேன். கருணா கார்ப்பரேசன் நிதி நிறுவனத்தின் பெயரில் வங்கி கணக்கு இருக்கிறதா என்றால் சிட்டி யூனியன் பேங்க், தில்லைநகரில் வங்கி கணக்கு உள்ளது. கருணாமூர்த்தி நிதி நிறுவனத்தில் கடன் பெறுபவர்களுக்கு நிதி நிறுவன வங்கி கணக்கிலிருந்து பணம் கொடுக்கப்படுமா என்றால் தனிநபர் நிறுவனம் என்பதால் நிறுவனத்தின் சார்பாகவும் கொடுக்கலாம் தனிப்பட்ட முறையிலும் கொடுக்கலாம். கருணா கார்ப்பரேசன் சம்மந்தப்பட்ட கணக்குகளை ஒவ்வொரு வருடமும் வட்டாட்சியர் காண்பித்து ஒப்புதல் பெற வேண்டுமா என்றால் இல்லை. மணி வெண்டர்ஸ் ஆக்டிங்படி என்னுடைய நிதி நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளதால் ஒவ்வொரு ஆண்டும் வரவுசெலவு கணக்குகளை அரசு அலுவலர் தாசில்தாரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், ஆனால் நான் அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வருமானவரி செலுத்திய ஆடிட்டர் ஸ்டேட்மெண்டில் ரூ.55,00,000/- பிரதிவாதிக்கு செலுத்தியதாக சொல்லப் பட்டுள்ளதா என்றால் அதில் வராது. வரவு செலவு அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. 2017-2018 நிதி ஆண்டில் கருணா கார்ப்பரேசனால் மூன்று நபர்களுக்கு பணம் கொடுக்கப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான் (வா.சா.ஆ.3 பக்கம் 22). நான் சொல்லும் விபரங்கள்படிதான் ஆடிட்டர் அறிக்கை தயார் செய்வார் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு பல்வேறு தவணைகளில் தொகைகள் கொடுக்கப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். ஏன் அவ்வாறு கொடுக்கப்பட்டது என்றால் அவர் கேட்டதன் அடிப்படையில் அவ்வாறு கொடுத்தேன். நான் கடன் கொடுத்ததற்கு

ஆதரவாக எழுத்து மூலமான ஒப்பந்தம் ஏதும் எங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ளப் பட்டதா என்றால் இல்லை. வெளி நபர்களுக்கு கடன் கொடுத்தால் எழுதி வாங்கி கொண்டுதான் கொடுப்பேன் என்றால் சரியல்ல. தெரிந்தவர்களுக்கு நம்பிக்கையின் அடிப்படையில் தான் பணம் கொடுப்பேன். வட்டி 24 சதவீதம் பிரதிவாதி தர ஒப்புக் கொண்டதற்கு ஆவணம் ஏதும் உள்ளதா என்றால் ஆவணம் இல்லை. பெரும்பாலும் நகைகடன் தான் நான் கொடுப்பேன். நான்தான் வழக்கறிஞரிடம் விபரம் சொன்னேன். ஐம்பத்தி ஐந்து லட்சம் கொடுத்தது உண்மை. பிரதிவாதி கேட்டதன்படி நான் பிரித்து பிரித்து கொடுத்தேன். பிரதிவாதி எப்போது வீடு வாங்கினார் என்று தெரியாது. எந்த தேதியில் சொத்தை பிரதிவாதி விற்றுவிற்று வெளியூர் செல்வது எனக்கு தெரியும் என்றால் பிரதிவாதி வழக்குரை சொத்தினை விற்பனை செய்ய முயற்சி மேற்கொண்ட விபரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வெளியே உள்ள நபர்கள் மூலம் தெரிய வந்தது. உடனடியாக நான் ஆட்சேபணை மனு தாக்கல் செய்தேன். அப்போதுதான் சொத்தை விற்க போகிற விபரம் தெரியவந்தது. அதற்கு முன்பு தெரியாது. எனக்கு தகவல் சொன்னவர் விபரம் எனக்கு ஞாபகம் இல்லை. ஆட்சேபணை மனுவினை நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்ய முடியும். இந்த விபரத்தை நான் வழக்கறிஞரிடம் வழக்கு தாக்கல் செய்யும் போது சொன்னேனா என்றால் சொல்லியிருப்பேன். நான் பிரதிவாதிக்கு அவரது சொத்தை அடமானம் வைத்து பணம் கொடுக்கவில்லை. நம்பிக்கையின் பேரில்தான் கடன் கொடுத்தேன். உயிலின் அடிப்படையில் வைத்தீஸ்வரன் சொத்துக்கள் அனைத்தையும் எனக்கு எழுதிக் கொடுத்துவிட்டார். அந்த சொத்துக்களில் சில சட்டப் பிரச்சினைகள் உள்ளது. அதை தீர்த்தபின்பு அந்த சொத்துக்களை அவரது வாரிசுகளுக்கு கொடுப்பேன். வைத்தீஸ்வரன் எழுதி வைத்த உயிலில் 4 அயிட்டச் சொத்துக்கள் எனக்கு சேர வேண்டும் என்றுதான் அதில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் வேறு யாருக்கும் உரிமை இல்லை என்று அதில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உயிலில் இந்த உயிலில் கண்ட சொத்துக்கள் நானும் கருணாமூர்த்தியும் சேர்ந்து பெற்ற

சொத்துக்கள் என்பதால் இந்த சொத்துக்களை கருணாமூர்த்திக்கு எழுதிக் கொடுப்பதாக கண்டுள்ளது என்றால் சரிதான். எனக்கும் வைத்தீஸ்வரனுக்கும் சரியாக பேச்சு வார்த்தை இல்லை என்பதாலும் பிரதிவாதிதான் என் சார்பாக வைத்தீஸ்வரனிடம் பேசி அவர் சம்மதித்து அதன் அடிப்படையில் உயில் எழுதப்பட்டது என்றும், உயில் எழுதுவதற்கு பெரும்பங்கு பிரதிவாதியையே சார்ந்தது என்று சொன்னால் சரியல்ல. வைத்தீஸ்வரன் எழுதிக் கொடுத்த ஜெனரல்பவர் பத்திரத்தில் பிரதிவாதிதான் முதல் சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்றால் இருக்கலாம். நான் சொல்வது போல் பிரதிவாதி எந்த தொகையும் கடனாக பெறவில்லை என்றால் சரியல்ல. நான், வைத்தீஸ்வரன், பிரதிவாதி ஆகியவர் குடும்பத்தளவில் நெருங்கிய நட்பு உண்டு என்றும், எனக்கு வருமானவரி பிரச்சினை இருந்தது என்றாலும், அதனால் நான் பிரதிவாதி கணக்கில் பணம் செலுத்தி அந்த பணத்தை பிரதிவாதியிடமிருந்து பெற்று நான் சொத்து வாங்கினேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியும் எங்களுடைய கூட்டாண்மை நிறுவனத்தில் ஒரு பங்குதாரர் என்பதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் 2014 ஆம் ஆண்டு இருபது லட்சம் ரூபாய் கடன் பெற்று 2017 ஆம் ஆண்டு வட்டி இல்லாமல் செலுத்திவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு இருபது லட்சம் ரூபாய் கொடுக்கும் போது வெற்று காசோலையை கையொப்பம் பெற்று வாங்கி வைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி 20 லட்சம் பணத்தை செலுத்திய பின்பு அந்த 2 காசோலைகளை கேட்டார் என்றும், அந்த காசோலைகளை நான் தவறாக உபயோகப்படுத்தப்பட்ட மாட்டேன் என்றும், காசோலை கிடைத்தவுடன் ஒப்படைத்து விடுவதாக சொன்னேன் என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதியிடமிருந்து பணம் அபகரிக்க வேண்டும் என்பதற்காக முன்கூட்டியே திட்டமிட்டு ஆவணங்களை தயார் செய்து வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கலியமூர்த்தி எனக்கு நெருங்கிய நண்பர். பொதுவாக தெரிந்தவர்களாக இருந்தாலும் கடன் கொடுக்கும் போது ஆவணம் எழுதி வாங்குவது வழக்கம் என்றும், பிரதிவாதி தெரிந்தவர் என்பதால்

ஆவணம் இல்லாமல் கடன் கொடுத்தேன் என்று கூறுவது எல்லாம் உண்மையில் இந்த பிரதிவாதி எந்த கடனும் பெறவில்லை என்பதைதான் காட்டுகிறது என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கடன் பெற்றார் என்பதை காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் வங்கி ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வங்கி ஆவணம் கடன் கொடுத்ததை காண்பிக்க போதுமான ஆவணம் இல்லை என்பதால் அதன் அடிப்படையில் எனக்கு எந்த தொகையும் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் ஐம்பத்தி ஐந்து லட்சம் ரூபாய் கடன் வாங்கியதாக கூறப்படும் விபரம் எனக்கும் பிரதிவாதிக்கும் தவிர வேறு யாருக்கும் தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை - இல்லை.